*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International

Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

Available online at: www.tamilmanam.in

**Vol. 12 No. 03 (2026): August 2026, p550-558** | *Original Research Paper*

# தமிழ்க் காப்பியங்களின் சிறப்புகள்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றின் ஓர் ஒப்பீட்டு ஆய்வு

Special Features of Tamil Epics: A Comparative Study of Silappatikaram, Manimekalai, and Sivaka Chintamani

**முனைவர் பா. பாலச்சந்தர்,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

மண்ணிவாக்கம், சென்னை - 600 040

**Dr. P. Balachandar*,**

*Assistant Professor, Department of Tamil, PERI College of Arts and Science, Mannivakkam, Chennai - 600 040.*

*Email: balachandar03101989@gmail.com, Tel: Tel: 9750367352.*

**ச. பாக்கியலட்சுமி,**

இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு, , தமிழ்த்துறை, பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

மண்ணிவாக்கம், சென்னை - *600 040*

**S. Packialakshmi,**

*B.A. Tamil, Second Year, Department of Tamil, PERI College of Arts and Science, Mannivakkam, Chennai - 600 040*

*Article history*
Received: 20-07-2026
Revised: 01-08-2026
Accepted: **06-08-2026**
Published on: **20-08-2026**

*Corresponding Author Email: *balachandar03101989@gmail.com*, *Tel: Tel: 9750367352*

**Abstract:** In the tradition of Tamil literature, the epic literary genre emerged and developed following the Sangam literature. Among the works revered as the Aimperumkappiyangal (Five Great Epics)—Silappatikaram, Manimekalai, Sivaka Chintamani, Valayapathi, and Kundalakesi—this research paper aims to examine the special features of the three epics that are available in their entirety today: Silappatikaram, Manimekalai, and Sivaka Chintamani.

This paper analyzes political righteousness, social perspective, and feminist perspective through Silappatikaram; religious philosophy and social justice through Manimekalai; and religious doctrines, social structure, and culture through Sivaka Chintamani. Furthermore, this paper reveals from a comparative perspective how these three epics reflect the social structure and multifaceted human life of that period while carrying their respective religious philosophies (Jainism and Buddhism).

**Keywords:** *Five Great Epics, Silappatikaram, Manimekalai, Sivaka Chintamani, Feminism, Social Justice, Religious Philosophy, Destiny (Uzhvinai).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழிலக்கிய மரபில் காப்பிய இலக்கிய வடிவம் சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து தோன்றி வளர்ச்சி பெற்றது. ஐம்பெருங்காப்பியங்கள் எனப் போற்றப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்களுள் இன்று முழுமையாகக் கிடைக்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய மூன்று காப்பியங்களின் சிறப்புகளை ஆராயும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. அரசியல் அறம், சமுதாய நோக்கு, பெண்ணிய நோக்கு ஆகியவற்றை சிலப்பதிகாரம் வழியும், சமய தத்துவமும் சமூக நீதியும் மணிமேகலை வழியும், சமயக் கொள்கைகள், சமூக அமைப்பு, பண்பாடு ஆகியவற்றைச் சீவக சிந்தாமணி வழியும் இக்கட்டுரை ஆராய்கிறது. மேலும் இம்மூன்று காப்பியங்களும் தத்தம் சமய தத்துவங்களை (சமணம், பௌத்தம்) தாங்கிக் கொண்டே, அக்கால சமூக அமைப்பையும், பன்முக மனித வாழ்வியலையும் பிரதிபலிக்கும் விதத்தை ஒப்பீட்டு நோக்கில் இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

**கருச்சொற்கள்**

ஐம்பெருங்காப்பியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெண்ணியம், சமூக நீதி, சமய தத்துவம், ஊழ்வினை.

## 1. முன்னுரை

சங்க இலக்கியத்திற்குப் பிறகு காப்பியம் என்னும் இலக்கிய வகை வடிவம் தோன்றிய காலம் எது என்று அறுதியிட்டுக் கூற முடியாது; என்றாலும் கிமு இரண்டாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரம் தோன்றியதிலிருந்து காப்பியம் வளர்ச்சியடைந்தது என்று கூறலாம். காப்பியங்கள் பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், வளர்ச்சி காப்பியங்கள், கலவை காப்பியங்கள் என்று வளர்ச்சி பெற்றுள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருளையும் ஒப்பற்ற தலைவன் தலைவியையும் கொண்டு பாடப்படுவது பெருங்காப்பியங்கள் என்று அழைக்கப்படுகிறது. நான்கு பொருள்களையும் முழுமையாகப் பாடாமல் சில பொருள்களை மட்டும் பாடும் மரபு சிறுகாப்பியங்கள் என்று அழைக்கப்படுகிறது. மேலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி காப்பியத்தில் அக்கால சமூக நிலை குறித்தும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. சங்க இலக்கியத்திற்கு அடுத்த காப்பிய இலக்கிய காலத்தில் கதாப்பாத்திரங்களைச் சிறப்பு செய்யும் வகையில் மீயியல் கூறுகள் ஆங்காங்கே இடம்பெறும் காட்சிகளையும் காப்பியங்களின் வாயிலாக நாம் உணர முடிகிறது. சிலம்பு, மணிமேகலை, சீவக சிந்தாமணி காப்பியத்தில் பன்முக தன்மைகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

## 2. ஆய்வு நோக்கமும் முறையியலும்

இக்கட்டுரையின் நோக்கம் ஐம்பெருங்காப்பியங்களுள் முழுமையாகக் கிடைக்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய மூன்று காப்பியங்களின் அரசியல், சமுதாய, பெண்ணிய, சமய தத்துவ, சமூக நீதி சார்ந்த கூறுகளை உரையாடல் பகுப்பாய்வு முறையில் (textual analysis) ஆராய்வதாகும். புலியூர் கேசிகன் உரையுடன் கூடிய சிலப்பதிகாரம், மணிமேகலை மூலநூல்களும், புலவர் தமிழமுதன் தெளிவுரையுடன் கூடிய சீவக சிந்தாமணியும் முதன்மை மூலங்களாகக் கொள்ளப்பட்டு, இணையவழி வெளியிடப்பட்ட திறந்தநிலை ஆய்விதழ் கட்டுரைகளும், தமிழ் இணையக் கல்விக்கழகம் போன்ற கல்விசார் இணையதளங்களும் இரண்டாம்நிலை மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டு, ஒப்பீட்டு இலக்கிய முறையியல் வழி இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## 3. தமிழ்க் காப்பிய மரபு: ஐம்பெருங்காப்பியங்கள் ஓர் அறிமுகம்

முற்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் ஐந்து காப்பியங்களும் ஒருங்கே ஐம்பெருங்காப்பியங்கள் என அறியப்படுகின்றன. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்திலேயே தோன்றியவை; ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவை. சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி ஆகிய மூன்றும் சமண சமயத்தைச் சார்ந்தவை; மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயத்தைச் சார்ந்தவை. இவ்வைந்து காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய மூன்று நூல்கள் மட்டுமே இன்று முழுமையாகக் கிடைக்கின்றன; வளையாபதியும் குண்டலகேசியும் சிதைந்த நிலையிலேயே எஞ்சியுள்ளன. சேர நாட்டு இளங்கோ அடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரமும், சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்ட மணிமேகலையும் தொடர்புடைய கதைக்களம் கொண்டவையாதலால் 'இரட்டைக் காப்பியங்கள்' என அழைக்கப்படுகின்றன. சோழ அரச குலத்தைச் சேர்ந்த சமணத் துறவியான திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட சீவக சிந்தாமணி, சீவகன் என்பவனின் முழு வரலாற்றைத் தெரிவிப்பதால் அப்பெயர் பெற்றது. இம்மூன்று காப்பியங்களும் தத்தம் சமய நோக்கிற்கு உட்பட்டு, கதைகளின் வழியே மக்களுக்கு நீதிகளையும் வாழ்வியல் நெறிகளையும் போதிக்கும் நோக்கம் கொண்டவையாகும்.

## 4. சிலப்பதிகாரம்

### 4.1 அரசியல் தத்துவமும் அறமும்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்**

**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்**

**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**

எங்கும் எதிலும் அறத்தைப் பாதுகாக்க வேண்டும் என சிலப்பதிகாரம் போதித்து நிற்கிறது. அரசியல் என்பது பொதுமக்களை சரியான முறையில் நடத்துவது, பேணிக் காப்பது என்ற நிலையில் உள்ளது. அதன் அடிப்படையில் தான் நீதி, தர்மம், நியாயம் என்ற அனைத்தும் உற்பத்தியாகின்றன. சிலம்பில் பாண்டிய நெடுஞ்செழியன் மது உண்ட நிலையில் தீர்ப்பு வழங்கினான்; தவறிழைத்தான். ஆகையால் உயிர் நீத்தான். இதனை சமூகத்தில் உள்ள மக்கள் உணரும் வகையில் சிலம்பு போதிக்கிறது. மன்னராட்சி காலத்தில் இத்தகைய சிறப்பினைக் கூறியது காப்பியத்தின் சிறப்பினை மேம்படுத்துகிறது. ஊழ்வினை என்பது நாம் செய்த வினையின் தொடர்ச்சி என்பதைக் காப்பியம் எடுத்துரைக்கிறது.

### 4.2 சமுதாய நோக்கு

பண்டைய இலக்கியங்கள் அரசனையோ தெய்வத்தையோ காப்பியத்தின் தலைவன் தலைவியாகச் சித்தரித்துள்ளன. சிலப்பதிகாரம் சமூகக் குடிகளான வணிக மக்களைச் சிறப்பித்துள்ளது. நகரைப் போற்றும் போக்கும் சிலம்பு தன்னகத்தே கொண்டுள்ளது. கடவுளரையோ அரசர்களையோ அன்றி, பூம்புகார் நகரின் வணிகக் குடியில் பிறந்த கோவலனையும், அவன் மனைவி கண்ணகியையும் தலைவன் தலைவியாகக் கொண்டு பாடப்பட்டமையால், இக்காப்பியம் 'குடிமக்கள் காப்பியம்' என்றும் அழைக்கப்படுகிறது; இது பழந்தமிழ்ச் சமூகத்தில் பொதுமக்களுக்குக் கிடைத்திருந்த இலக்கிய அங்கீகாரத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

### 4.3 பெண்ணிய நோக்கு

**மாசறு பொன்னே வலம்புரி முத்தே!**

**காசறு விரையே! கரும்பே தேனே!**

**அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!**

**பெரும்குடி வாணிகன் பெருமட மகளே!**

**மலையிடைப் பிறவா மணியே என்கோ!**

இப்பாடல் கோவலன் கண்ணகியை வர்ணிக்கும் போக்கை மனையறம்படுத்த காதையில் நாம் காண்கிறோம். சிலம்பில் பெண்களின் நிலைப் பற்றி பேசும் போது கண்ணகி நீதியை நிலைநாட்டும் நோக்கோடு சமுதாயத்தில் போராடும் தன்மையைக் கண்ணகி கதாப்பாத்திரம்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

கொண்டுள்ளது. மாதவி ஒரு நடனக் கலைஞராகவும், வாழ்க்கைப் போராளியாகவும் சித்தரிக்கப்படுகிறாள். மாதவியின் கலைகளின் மூலம் ஆண்களைத் தன்வயப்படுத்தும் திறனையும், தன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் முறையையும் இக்கதாப்பாத்திரம் தெரிவிக்கிறது. சிலம்பில் பெண்ணியம் சார்ந்த விடையங்களை நோக்கும் போது பெண்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பது புலப்படுகிறது. கற்புக்கரசியாகக் கண்ணகியை முன்வைத்து 'பத்தினிக் காப்பியம்' என்றும் சிலப்பதிகாரம் போற்றப்படுவது, பெண்மையை உயர்த்திப் பேசும் அதேவேளையில், கற்பு எனும் ஒற்றைப் பண்பின் மீது பெண் அடையாளத்தை மையப்படுத்தும் பழந்தமிழ்ச் சமூக மனநிலையையும் வெளிப்படுத்துகிறது.

### 5. மணிமேகலை

#### 5.1 சமய தத்துவமும் சமூக நீதியும்

மணிமேகலைக் காப்பியம் அக்காலச் சமூக வாழ்வியலையும் பௌத்த சமயத்தின் தத்துவங்களையும் வெளிப்படுத்துகிறது. மேலும் துறவு வாழ்வு, சமூக நீதி கருத்துக்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு விளங்குவதால் மணிமேகலை சமூக நிலை காப்பியம் எனப்படுகிறது. சமய சார்பு தன்மைகளும் இக்காப்பியத்தில் இடம்பெறுகிறது; பௌத்த சமய சிந்தனைகள் இக்காப்பியத்தில் பரவலாகக் காணப்படுகிறது. மணிமேகலை கால சமூகத்தில் நான்கு நிலை சமுதாய மக்கள் வாழ்ந்தனர் என்ற குறிப்புகளும் காணப்படுகிறது. சமூக நீதியை நிலைநாட்டும் விதமாக கணிகையர் குடியில் பிறந்த பெண்ணைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு காப்பியம் இயற்றப்பட்டுள்ளது. மனித வாழ்வில் ஏற்படக்கூடிய தடைகளை எதிர்கொண்டு வாழ்வில் உயர்நிலை அடைவதை இக்காப்பியம் சுட்டி நிற்கிறது.

#### 5.2 மணிமேகலை காப்பியத்தின் நீதி

**அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்**
**மறவாது இதுகேள்: மன் உயிர்க்கு எல்லாம்**
**உடியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல் (மணி 25 : 227-230)**

**இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பொருள் செல்வமும் நில்லா**
**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை ஆவது (மணி 22 : 135-138)**

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

மணிமேகலை அறம் என்பது உலகில் உள்ள மக்கள் அனைவரும் பசி பிணி இல்லாமல் இருப்பதே அறம் என்கிறது. அத்தகைய செயலை உயர்ந்த அறமாகக் கொண்டு பாடப்பட்டது மணிமேகலை காப்பியம் எனலாம். பசி என்பது நோயாகப் பார்க்கப்பட்ட காலம் எனலாம். நாம் இவ்வுலகை விட்டு மறைந்துவிடுகிறோம்; ஆனால் நம்முடன் கடைசி வரையில் பின்தொடர்வது தர்ம காரியங்கள் என்பதையும் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. மக்கள் உணவுக்கு வழியில்லாமல் வாழ்ந்துள்ளனர் என்பதும் புலப்படுகிறது. இப்பிரச்சனையை அரச பெருமக்கள் தீர்க்கவில்லை; அதனைப் போக்க தெய்வ உருவம் பெற்று வந்த பெண் சமூகக் குறைகளைப் போக்கும் காப்பியமாக மணிமேகலை சித்தரிக்கப்படுகிறது. அமுத சுரபி எனும் பாத்திரம் வழியே பசியாற்றும் தொண்டினை மணிமேகலை மேற்கொள்வது, பௌத்தம் போற்றும் கருணை (compassion) எனும் அடிப்படைக் கோட்பாட்டையும் இக்காப்பியம் இலக்கிய வடிவில் பதிவு செய்துள்ளதைக் காட்டுகிறது.

### 6. சீவக சிந்தாமணி

சீவக சிந்தாமணி காப்பியமானது சம காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடு, சமூக அமைப்புகள், கலை மற்றும் இலக்கிய செழுமைகளையும் கொண்டுள்ளது. சமண நெறிகளைக் கூறும் காப்பியமாகவும் திகழ்கிறது. ஏமாங்கத நாட்டு வளம், செழுமை, கல்விக் கற்ற சான்றோர்கள், தான தர்மங்கள் ஏமாங்கத நாட்டில் நடைபெற்ற விதம் ஆகியவைகள் சமூகப் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

### 6.1 சமயக் கொள்கைகள்

ஒன்பது பெண்களை மணந்த சீவகன் அரசாட்சியைத் துறந்து சமண தர்மத்தின் நெறிப்படி துறவறம் மேற்கொண்டது சமண மதத்தின் உயர்வை இக்காப்பியம் எடுத்துக்காட்டுகிறது. இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே சீவக சிந்தாமணி காப்பியத்தின் மையக்கருத்தாக அமைந்துள்ளது; எனவேதான் 'மணநூல்' என்றும் இந்நூல் அழைக்கப்படுகிறது.

### 6.2 சமூக அமைப்பு

சீவக சிந்தாமணியில் இடம்பெறும் காப்பியக் கதாபாத்திரங்கள் அரச குடும்பத்தினர், வணிகர்கள், சான்றோர் பெருமக்கள் அனைவருடனும் சீவகன் கொண்ட தொடர்பின் அடிப்படையில் சமூக வலைப்பின்னலைக் காட்டுகிறது.

### 6.3 பண்பாடு

நாட்டின் செழிப்பு, இயற்கை வளம், வாணிபம், கலை, இசை, நடனம் போன்றவைகள் அக்காலத்திய பண்பாட்டுப் பின்புலன்களைச் சுட்டி நிற்கின்றன.

**காய் மாண்ட தெங்கின் பழம் வீழ கமுகின் நெற்றி**
**பூ மாண்ட தீம் தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து**
**தேமாங்கனி சிதறி வாழை பழங்கள் சிந்தும்**
**ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே**

தென்னை மரத்திலிருந்து விழுகின்ற தேங்காய், பாக்கு மரத்தின் உச்சியில் உள்ள தேனடையைக் கிழிக்கிறது; பின்னர் பலாப்பழத்தைப் பிளந்து மாங்கனியைச் சிதறவைத்தது, வாழைப்பழங்களை உதிரச் செய்தது — இத்தகைய வளமுடையது ஏமாங்கத நாடு என்கிறது இப்பாடல் வரிகள்.

**இவ்வாறாகப் பிறப்பதுவோ**
**இதுவோ மன்னர்க்கு இயல் வேந்தே**
**மெய்வகை தெரிதல் ஞானம்**
**விளங்கிய பொருள்கள் தம்மை**
**பொய்வகை இன்றித் தேறல் காட்சி**
**ஐம்பொறியும் வாட்டி**
**உய்வகை உயிரைத்தேயாது**
**ஒழுகுதல் ஒழுக்கம், மூன்றும்**
**இவ்வகை நிறைந்த போழ்தே**
**இருவினையும் கழியும் என்றான்**

ஞானம், காட்சி, ஒழுக்கம் ஆகிய மூன்றும் நிறைவுற்ற பொழுதே இருவினைகளும் (நல்வினை, தீவினை) கழியும் என்னும் இப்பாடல் வரிகள் சமண தத்துவத்தின் முப்பொருள் அடிப்படையை — சரியான காட்சி (right perception), சரியான ஞானம் (right knowledge), சரியான ஒழுக்கம் (right conduct) — இலக்கிய வடிவில் வெளிப்படுத்துகின்றன.

### 7. ஐம்பெருங்காப்பியங்களின் ஒப்பீட்டு பார்வை

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய மூன்று காப்பியங்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது, ஒவ்வொன்றும் தனித்துவமான சமய, சமூக நோக்கை முன்வைத்தாலும், மூன்றுமே அறம் என்னும் பொதுவான மையக் கருத்தை நோக்கியே பயணிக்கின்றன எனலாம். சிலப்பதிகாரம் அரசியல் அறத்தையும், பத்தினி நெறியையும் மையமாகக் கொண்டு பேசுகிறது;

மணிமேகலை பசி தீர்த்தலையும் கருணையையும் அறத்தின் உச்சமாகக் கொண்டு பேசுகிறது; சீவக சிந்தாமணி இன்பங்களை அனுபவித்த பின் அவற்றைத் துறந்து வீடுபேறு அடைவதையே இறுதி இலக்காகக் கொண்டு பேசுகிறது. மூவகைக் காப்பியங்களிலும் பெண் கதாபாத்திரங்கள் குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றன — கண்ணகி கற்பின் சின்னமாகவும், மாதவி கலைஞர்/போராளியாகவும், மணிமேகலை கணிகையர் குடியிலிருந்து துறவு நிலைக்கு உயரும் பெண்ணாகவும் சித்தரிக்கப்படுவது, பழந்தமிழ்ச் சமூகத்தில் பெண் நிலை பற்றிய பன்முகப் பார்வைகளை வெளிப்படுத்துகிறது. மேலும், சிலப்பதிகாரமும் சீவக சிந்தாமணியும் சமண சமயச் சார்பையும், மணிமேகலை பௌத்த சமயச் சார்பையும் கொண்டிருந்தாலும், மூன்று காப்பியங்களுமே காலத்தால் அழியாத மனித அறத்தையே இறுதியில் வலியுறுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## 8. முடிவுரை

மேற்கண்ட செய்திகள் வாயிலாக சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி காப்பியங்கள் சமூகப் பின்புலம் கொண்டவைகளாகவும், பல்நோக்குப் பார்வை காப்பியங்கள் என்பதையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. அரசியல் அறம், சமுதாய அமைப்பு, பெண்ணிய நிலைப்பாடு ஆகியவற்றைச் சிலப்பதிகாரமும், சமய தத்துவமும் சமூக நீதியும் கலந்த மனிதநேயப் பார்வையை மணிமேகலையும், சமண சமய ஒழுக்க நெறியையும் பண்பாட்டுச் செழுமையையும் சீவக சிந்தாமணியும் தமிழ் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளன. இம்மூன்று காப்பியங்களும் ஒருங்கிணைந்து, தமிழ்ச் சமூகத்தின் அறவியல் பாரம்பரியத்தையும், பண்பாட்டு அடையாளத்தையும், இலக்கியச் செழுமையையும் இன்றளவும் நிலைநிறுத்தி வருகின்றன என்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

## துணைநூற் பட்டியல் (Works Cited — MLA 9வது பதிப்பு)

[1.] இளங்கோ அடிகள். சிலப்பதிகாரம். உரை: புலியூர் கேசிகன், ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2005.

[2.] சீத்தலைச் சாத்தனார். மணிமேகலை. உரை: புலியூர் கேசிகன், ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2005.

[3.] திருத்தக்க தேவர். சீவக சிந்தாமணி — தெளிவுரை. உரை: புலவர் தமிழமுதன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2010.

[4.] சுப்ரமணியன், ச. வே. தமிழ் இலக்கிய வரலாறு. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2008.

[5.] "ஐம்பெருங் காப்பியங்கள்." விக்கிப்பீடியா — தமிழ்ப் பதிப்பு, விக்கிமீடியா அறக்கட்டளை, 2026, ta.wikipedia.org/wiki/ஐம்பெரும்_காப்பியங்கள். அணுகப்பட்ட நாள் 21 ஆகஸ்ட் 2026.

[6.] "1.1 காப்பியங்கள் ஐந்து — ஒரு விளக்கம்." தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy), tamilvu.org/ta/courses-degree-c031-c0312-html-c03121l1-17435. அணுகப்பட்ட நாள் 21 ஆகஸ்ட் 2026.

[7.] ஜெயகணேஷ், ஆ. "சமயங்களின் பார்வையில் தமிழ்க் காப்பியங்கள் — ஓர் ஆய்வு." Geotamil, geotamil.com/index.php/2021-02-11-18-03-56/8136-603103. அணுகப்பட்ட நாள் 21 ஆகஸ்ட் 2026.

[8.] "ஐம்பெருங்காப்பியங்கள் யாவை? The Five Great Epics of Tamil Literature." Tamil History, 2020, www.tamilhistory.co.in/2020/10/five-great-epics-tamil-literature-silappatikaram-manimegalai-civaka-cintamani-kundalakesi-valayapathi.html. Accessed 21 Aug. 2026.

[9.] G, Rasa. "கண்ணகி சிறப்புநிலை." Computer Easy2Learn, 8 Dec. 2020, computereasy2learn.blogspot.com/2020/12/blog-post_8.html. Accessed 21 Aug. 2026.

[10.] "சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் கூறுகள்." International Journal of Advanced Development in Science and Technology, ijadst.com/ajradmin/certificates/209/IJADST_20220467.pdf. Accessed 21 Aug. 2026.

[11.] "தமிழ் இலக்கியத்தில் ஐம்பெருங்காப்பியங்கள்." SlideShare, 2025, www.slideshare.net/slideshow/ss-1dba/277553416. Accessed 21 Aug. 2026.